10

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0370 /2016/ந

ஆணை எண்: 115 /2016

நாள்: 29 /06 /2016

திரு. B சுருளிராஜன்,
த/பெ.பாலாமணி,
நகர்மன்ற உறுப்பினர், 20 வது வார்டு,
தருமபுரி.

மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
தருமபுரி நகராட்சி.

எதிர் மனுதாரர்

திரு.பா.சுருளிராஜன், த/பெ.பாலாமணி, நகர்மன்ற உறுப்பினர், தருமபுரி நகராட்சி என்கிற மனுதாரர் தாக்கல் செய்துள்ள 02.05.2016 நாளிட்ட முறையீடு எண்.0370/2016 ஆக 03.05.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது முறையீடு குறித்து பெறப்பட்ட உரிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இம்முறைமன்ற நடுவத்தால் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

மனுதாரரது முறையீட்டில் தருமபுரி நகராட்சிக்கு சொந்தமான கடைகளை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலமாக 26.02.2016 அன்று குத்தகைக்கு விட விளம்பர அறிவிக்கை

14.02.2016 அன்று தினத்தந்தி நாளிதழில் நகராட்சி ஆணையரால் விளம்பரப்படுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிர்வாக காரணங்களினால் மறுதேதி தெரிவிக்கப்படாமல் 25.02.2016 நாளிட்ட தருமபுரி நகராட்சி ஆணையரது அறிவிப்பின் மூலம் ஒத்தி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சியின் நடவடிக்கைகளினால் மனுதாரரைப் போன்றவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதாக பதிவு செய்யப்படும் என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி முறையே விளம்பரப்படுத்திட வேண்டுமென மனுதாரரால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மேலும், 26.02.2016 அன்று நடைபெறவிருந்த பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளின் அடிப்படையில் நகராட்சி ஆணையரது பெயரில் தன்னால் எடுக்கப்பட்ட 10 (பத்து) வங்கி வரைவோலைகள் குறித்தும் விவரங்களை மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

இது குறித்து விரிவான பத்தி வாரியான அறிக்கை / எதிர் உறுதி ஆணையினைத் தாக்கல் செய்திடுமாறு தருமபுரி நகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்ற நடுவத்தால் 20.05.2016 மற்றும் 16.06.2016 நாளிட்ட அறிவிப்பாணைகள் வழங்கப்பட்டன. அதனடிப்படையில் தருமபுரி நகராட்சி ஆணையரால் விரிவான அறிக்கை / எதிர்உறுதி ஆணவம் (ந.க.எண்.452/16/அ3 நாள்.24.06.2016 ) இம்முறை மன்ற நடுவத்தின்முன் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி அறிக்கையில் 11.02.2016 நாளைய நகர்மன்ற அனுமதி தீர்மானத்தின் அடிப்படையில் நகராட்சியின் 28 கடைகளுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோர உரிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டதெனவும் மனுதாரர் உட்பட நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரும் தனக்கு ஏல அறிவிப்பு வழங்கப்படவில்லை என மறுப்பு ஏதும் தனது முறையேட்டில் தெரிவிக்கவில்லை.

நகராட்சி ஆணையரது அறிக்கையில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒத்தி வைப்பதற்கு முன்பாக ஏலத்திற்கான முன்வைப்புத் தொகைக்கென மனுதாரரிடமிருந்தோ மற்றும் ஏலத்தில் கலந்து கொள்ள வருகை புரிந்தவர்களிடமிருந்தோ வங்கி வரைவோலைகள் ஏதும்

பெறப்படவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரது மனுவில் குறிப்பிட்டுள்ள பத்து வங்கி வரைவுகள் குறித்து முறையீட்டினை பரிசீலித்ததில் மேற்படி வங்கி வரைவுகள் மனுதாரரால் மேற்படி ஏலத்திற்கென நகராட்சி ஆணையரது பெயரில் எடுத்து வைத்திருந்ததாக மட்டுமே தெரிகிறது. மேலும், மேற்படி வங்கி வரைவுகள் தன்னால் வழங்கப்பட்டதாகவோ அல்லது நகராட்சியினால் பெற்றுக் கொள்ளப்பட்டதெனவோ மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. இது குறித்து முறைமன்ற நடுவ ஆணைகளின்படி தொலைபேசியில் (29.06.2016) விசாரித்த போது மேற்படி வங்கி வரைவுகள் தன் வசமே உள்ளன என மனுதாரரால் தெரிவிக்கப்பட்டது. எனவே, இதில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை.

நகராட்சி ஆணையரது அறிக்கையில் பெரும்பான்மையான 21 நகர்மன்ற உறுப்பினர்கள் கடைகளின் அனைத்து கட்டுமான பணிகளும் முடிவடைந்த பிறகு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாமென 24.02.2016 அன்று எழுத்து மூலமாக கடிதம் வழங்கியுள்ளார்கள் எனவும் நிர்வாக காரணங்களுக்காக 26.02.2016 அன்று நடைபெறவிருந்த பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒத்தி வைக்கப்பட்டு 24.02.2016 அன்று நகராட்சி விளம்பர பலகையில் விளம்பர அறிவிப்பு செய்யப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு நடத்தை விதிகள் அமுலுக்கு வந்ததால் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் தற்போது 19.07.2016 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், செய்திதாளில் விளம்பரம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் தருமபுரி நகராட்சி ஆணையரது எதிர் உறுதி ஆவணத்தில் உறுதிபட தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் தொடர்பாக தொடர்புடைய ஆவணங்களின் நகல்களையும் உரிய சான்றொப்பமிட்டு நகராட்சி ஆணையர் தாக்கல் செய்துள்ளார். 26.02.2016 அன்று நடைபெறவிருந்த ஏல அறிவிப்புக்கான விளம்பரத்தினை நகர்மன்ற உறுப்பினர்களுக்கு முறையே சார்வு செய்தமைக்கான ஒப்புகை கையொப்பங்களடங்கிய ஆவண நகலினையும் தாக்கல் செய்துள்ளார். இதில் 20–வது வார்டு உறுப்பினர் என்ற முறையில் மனுதாரரது கையொப்பமும் இடம் பெற்றுள்ளது. மேலும், தருமபுரி நகராட்சி ஆணையரது 02.03.2016 நாளிட்ட (ந.க.எண்.452/16/அ3

நாள்.02.03.2016) அறிவிப்பின் மூலம் "மீண்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் தேதி செய்திதாளில் விளம்பரம் செய்யப்பட்டு முறையாக நகராட்சி விதிகளின்படி ஏலம் நடத்தப்படும் அறிவிப்புகளும் வழங்கப்படும்" என மனுதாரருக்கு குறிப்பான பதில் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, இனி நடைபெற உள்ளபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி குறித்து அறிவிப்புகள் குறித்து யூகத்தின் அடிப்படையில் "அறிவிப்புகளின்றி நடைபெற்றால்" என மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ள வினாக்கள் ஆதாரமற்றதாகும்.

இருப்பினும், மேற்படி ஏல நடவடிக்கைகள் விதிமுறைகளின்படி நடத்தி முடிக்கப்பட்டமைக்கான அறிக்கையினை உரிய நேரத்தில் இம்முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்திட வேண்டுமென தருமபுரி நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2016–ம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது,

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்:

1. திரு.பா.சுருளிராஜன்,
   த/பெ.பாலாமணி,
   48B, செல்வகவுண்டர் வீதி,
   தருமபுரி – 636 701

2. நகராட்சி ஆணையர்,
   தருமபுரி நகராட்சி, தருமபுரி மாவட்டம் –636 701

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   சேலம்.

4. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   சேலம்.